# மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில் தேசிய பாதுகாப்பு வாரம் கடைப்பிடிப்பு

**சென்னை, மார்ச் 29:** சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில், 50-ஆவது தேசிய பாதுகாப்பு வாரம் கொண்டாடப்பட்டது.

இதையொட்டி, பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கோயம்பேடு மெட்ரோ ரயில் நிறுவன அலுவலகம், கட்டுமானப் பகுதிகளில் நடைபெற்றது. மேலும், பல்வேறு கட்டுரைப் போட்டி உள்பட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

பாதுகாப்பு வார கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, பாதுகாப்புத் தொடர்பாக உறுதிமொழியை சென்னை மெட்ரோ ரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ் உள்பட பலர் பங்கேற்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

நிகழ்ச்சியில், மெட்ரோ ரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ் பேசுகையில், ஊழியர்களிடையே பாதுகாப்பு கலாசாரத்தை உருவாக்குதல், பூஜ்ய விபத்துகள் என்ற நிலையை அடைதல், பாதுகாப்பு கலாசாரத்தின் அடிப்படையில் பாதுகாப்பு மற்றும் நடத்தை மேம்படுத்துதல் ஆகியவை மிக முக்கியம் என்றார் அவர்.